**<u>அரக்கோணம் நகராட்சி</u>**
**<u>சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு</u>**

**கூட்ட எண்.63** **நாள்..27.10.2020.**

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்.29.10.2020 வியாழன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

-----

அரக்கோணம் நகராட்சி 29.10.2020 வியாழன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர்/2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_ மனறம் பதிவு செயயலாம்.**

**நகர மன்ற தீர்மான எண்.782** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 02**

கொரோனா நோய தொறறு தடுப்புபணிக் காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில 01.4.2020 முதல 31.05.2020 (2019–2020)ம் நிதியாண்டு) வரை உளள காலத்திறகு உளளாட்சி அமைப்புகளில செயலபடாதகடைகள/ வரியிலலா இனங்கள (குத்தகை) இனங்களுக்கு வாடகை தொகையினை / குத்தகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து (தளளுபடிசெயய) (Waiver of payment) வரப்பெறுளள அரசாணை எண்.298 நகராட்சிநிர்வாகம் மறறும் குடிநீர் வழங்கல துறை நாள.02.09.2020–ஐ மனறத்தின பார்வைக்கும், பதிவிறகும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–_ மனறம் பதிவு செயயலாம்.

ந.க.எண். 942/2020/அ1

**நகர மன்ற தீர்மான எண்.783** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 03**

அரசாணை எண். 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுகல் துறை, நாள் 02.09.2020–ல் தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பொது முழு ஊரடஙகு காலத்தில் நகராட்சி பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனஙகள் மற்றும் குத்தகை கடைகள், 01.04.2020 முதல் 31.05.2020 வரையில் செயல்படாத குத்தகை இனஙகளின் கேட்பு மற்றும் கடைகளின் கேட்பு தள்ளுபடி செய்ய உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –28 அவர்களின் கடிதம் ந.க.எண். 8763/2020/ஆர்2 நாள் 29.09.2020–ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணஙக, இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.980/2018/அ1 நாள் 08.10.2020–ல் மேற்கண்ட செயல்படாத குத்தகை இனங்கள் மற்றும் கடைகளை ஆய்வு செய்ய குழு அமைத்து உத்தரவிடப்பட்டது. அதன் அடிப்படையில் குழுவின் தலைவர் மற்றும் குழுவில் இடம்பெற்றுள்ள அலுவலர்கள் 16.10.2020 தேதிய குறிப்பின்படி, பட்டியலில் உள்ள கடைகள் மற்றும் குத்தகை இனங்களின் கேட்பினை 01.04.2020 முதல் 31.05.2020 வரை தள்ளுபடி செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குத்தகை இனம் வ.எண்.1 முதல் 4 வரை உள்ள குத்தகை கேட்பு 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான கேட்பு ரூ. 41270/–(GST உட்பட)னை நீக்கம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3) குத்தகை கடைகள் வரிசை எண். 1 முதல் 320 வரையுள்ள குத்தகை கடைகளின் கேட்பு 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான கேட்பு ரூ. 739184/–னை(GST உட்பட) நீக்கம் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.980/2018/அ1

**நகர மன்ற தீர்மான எண்.784** **நாள்: 27.10.2020**

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.04**

தணிக்கை அரக்கோணம் நகராட்சி 2019–20ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் தொகை ரூ.75,078/– செலுத்துமாறு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, வேலூர் அவர்களால் கோரப்பட்டுள்ளதால், இத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- 2019–20 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை கட்டணம் தொகை ரூ.75,078/– செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.458/2013/பி2)

**நகர மன்ற தீர்மான எண்.785** **நாள்: 27.10.2020**

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் 05**

மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்களின் காணொளி காட்சி ஆய்வுகூட்ட அறிவுறுத்தலின்படியும், தற்போது கூட்டங்கள் அனைத்தும் காணொளி காட்சி வாயிலாக நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி காணொளி காட்சிக்கு தேவையான கணினி மற்றும் அதன் உபகரணங்களை வாங்க தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து All in one Computer, Desktop Computer, Printer Duplex, Printer All in one, Mechanical Keyboard, Optical Mouse 15 inches Monitor and Antivirus உபகரணங்களை வாங்க தோராய செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :
1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி உபகரணங்களை Elcot நிறுவனத்தில் DGST விலையில் விலைப்புள்ளி கோரி கணினி மற்றும் அதன் உபகரணங்களை கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் . 948/இ1/2020

**நகர மன்ற தீர்மான எண்.786** **நாள்: 27.10.2020**

அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் :06**

இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளிலும், கணினி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. கணினிகளின் மற்றும் அதன் உபகரணங்கள் LAN Connectivity போன்ற அனைத்தும் மின்சாதனம் கொண்ட உபகரணங்கள் வாங்கப்பெற்று Warranty Period முடிந்துள்ளது. எனவே, மேற்கண்ட உபகரணங்கள் அனைத்தும் தொடர்ந்து உடனுக்குடன் பழுது ஏற்பட்டால் நிவர்த்தி செய்யவும், பணிகள் தடைபடாமல் இருக்கவும் இந்நகராட்சியில் பயன்படுத்தப்படும் கணினிகள் மற்றும் அதன் உபகரணங்களை AMC (Annual Maintenance Contract) செய்ய தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :
1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணியினை உள்ளூர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி கோரி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .948/இ1/2020

**நகர மன்ற தீர்மான எண்.787** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 07**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி நகராட்சி பராமரிப்பில் உள்ள போலாட்சியம்மன் நகராட்சி நடுநிலைப்பள்ளி, மற்றும் காந்தி நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் உள்ள இரண்டு பள்ளி கட்டிடங்கள் மிகவும் சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதால் இதனை இடித்து அப்புறப்படுத்தி தருமாறு வட்டார கல்வி அலுவலர்–2, அரக்கோணம் மற்றும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் கோரியுள்ளபடி மேற்கண்ட பள்ளி கட்டிடங்கள் ஆய்வு செய்யப்பட்டு அதன்படி பழுதடைந்த பள்ளி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தவும், அதற்கான தோராய மதிப்பீடு செலவினம் ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண் .887/இ1/2019

**நகர மன்ற தீர்மான எண்.788** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் .08**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 இலட்சயனார் தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலத்தில் மழை நீர் தேங்கி பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடும், போக்குவரத்திற்கு தடையாக உள்ளது. மேற்படி மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலத்தினை புதுப்பித்து உயர்த்தி அமைக்க தோராய மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண் .887/இ1/2019

**நகர மன்ற தீர்மான எண்.789** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் .09**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.3292/2020//UGSS–1 நாள்.15.09.2020 தேதியிட்ட கடிதத்தில் அரக்கோணம் நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டப்பணிக்கான கழிவு நீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்கி சத்தம் செய்ய Robotic Sewer Cleaning Machine – ஐ Government e-Market(GeM) Portal –ல் உள்ள மதிப்பீடு தொகை ரூ.3952568/–(முப்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து ஐநூற்று ஆறுபத்து எட்டு) வாங்கி கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. மேற்படி Robotic Sewer Cleaning Machine – ஐ பொது நிதி அல்லது Corporate Social Responsibility Fund (CSR) மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .1911/2019/இ1

**நகர மன்ற தீர்மான எண்.790** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் .10**

இந்நகராட்சி பகுதிகளை தூய்மையாக வைத்திடவும், கொரானா தொற்று, இதர தொற்று நோய்கள் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், கிருமி நீக்கம் செய்யும் பணிக்கு தேவைப்படும் கிருமிநாசினியான **ECO CLEAN 50 PLUS – DC (Double Concentric) DISINFECTANT** 150 லிட்டர் 2020–2021 ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.9.00 லட்சத்திற்கும், கொரானா கால பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்குவதற்கும், நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மான எண்.791** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் .11**

இந்நகராட்சி பகுதிகளை தூய்மையாக வைத்திடவும், கொரானா தொற்று, இதர தொற்று நோய்கள் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், கிருமி நீக்கம் செய்யும் பணிக்கு தேவைப்படும் கிருமிநாசினிகளான **நீர்த்த சுண்ணாம்பு தூள், பிளிச்சிங் பவுடர், பினாயில்** ஆகியவை 2020–2021 ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கும், கொரானா கால பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்குவதற்கும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மான எண்.792** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் .12**

இந்நகராட்சி பொதுபிரிவு, பொறியியல் பிரிவு, மற்றும் பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கு சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து கொள்ளவும் மற்றும் தையற்கூலி வழங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : இந்நகராட்சி பொதுபிரிவு, பொறியியல் பிரிவு, மற்றும் பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 715/எச்1/2020)

**நகர மன்ற தீர்மான எண்.793** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் .13**

இந்நகராட்சி எல்லைக்குள் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து ராபிஸ் தடுப்பூசி போடுதல் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் தொடர்ந்து 3 நாட்கள் மருத்துவ கவனிப்பு செய்து நாய்களை பிடித்த இடத்தில் கொண்டு சென்று விடுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள கொள்ள தோராய செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொதுமக்களின் நலன் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும்

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 701/எச்1/2020)

**நகர மன்ற தீர்மான எண்.794** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் .14**

இந்நகராட்சி எல்லைக்குள் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து ராபிஸ் தடுப்பூசி போடுதல் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் தொடர்ந்து **3** நாட்கள் மருத்துவ கவனிப்பு செய்து நாய்களை பிடித்த இடத்தில் கொண்டு சென்று விடுதல் போன்ற பணிகளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் **09.09.2020** அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **விவரம்** | **Animal Trust of India Chennai.** **ஒன்றின் விலை ரூ** | **Dr.T.Rama,B.V.SC., Vetnary Surgeon Chennai-600118** |
|---|---|---|---|
| **1** | நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல் | **675/–** | **700/–** |

மேற்காணும் விவரப்படி நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.**6.00** லட்சத்திற்கு தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் அதற்கான தோராய செலவினத்தொகைக்கும் நகரமன்ற அனுமதி பெறவேண்டி மன்றப்பொருள் தயார் செய்து ஆணையரின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

மேற்காணும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **Animal Trust of India Chennai,** அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும், அதற்கான செலவினத்தொகை ரூ.**6.00** லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி வேலை உத்திரவு வழங்குவதற்கும்,
அதற்கான செலவினத்தொகை ரூ.**6.00** லட்சத்திற்கும்
வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 701/எச்1/2020)

**நகர மன்ற தீர்மான எண்.795** **நாள்: 27.10.2020**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**